14.08.2015

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சோலார் மூலம் இயங்கவுள்ள முதல் விமான நிலையம்

கொச்சி : கொச்சி விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 12 மெகாவாட் திறன்கொண்ட சோலார் மின்நிலையத்தை, வரும் 18ம் தேதி கேரள முதல்வர் உம்மன் சாண்டி திறந்து வைக்க உள்ளார். இதன் மூலம் தினமும் 48 ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது. இதன் மூலம் நாட்டில் சோலார் மின்சாரம் மூலம் இயங்கவுள்ள முதல் விமான நிலையம் என்ற பெயரை கொச்சி விமான நிலையம் தட்டிச் செல்லவுள்ளது. முன்னதாக வருகைப்பகுதியில் 100 கிலோவாட், மேற்பரப்பு, தரைப்பகுதியில் 1 மெகாவாட் திறனுள்ள சூரிய மின்னுற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### மரபணு மாற்றிய தாவரங்களை வெறுக்கும் வண்ணத்துப்பூச்சிகள்: ஆய்வில் தகவல்



காந்திகிராமம்:வண்ணத்துப்பூச்சிகள் மரபணு மாற்றிய தாவரங்களை வெறுத்து ஒதுக்குவதாக, காந்திகிராம பல்கலை ஆய்வில் தெரியவந்துள்ளது.ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும் காரணியாக வண்ணத்துப்பூச்சி உள்ளது. இவை புதர்காடு, பசுமை மாறாகாடு என, அனைத்திலும் வாழ்கின்றன. உலகில் 20 ஆயிரம் இனங்கள் உள்ளன.

இவ்வினங்கள் இந்தியாவில் 1,800ம், தமிழகத்தில் 400ம், பழநி மலையில் 310 ம், சிறுமலையில் 110 ம் உள்ளன. பல்லுருத் தோற்றம் கொண்ட இவை ஆயிரம் கி.மீ., தூரம் வரை பறக்கும். சில வண்ணத்துப்பூச்சிகள் ஒட்டுண்ணியாக உள்ளன. இவற்றின் வாயில் உள்ள நீண்ட குழல் மூலம் மலர்களில் உள்ள தேன், மரத்தில் வடியும் நீர்மம், மகரந்தத்தூள், அழுகிய இலை, பழங்களை உண்கின்றன.இந்தியாவில் 28 வண்ணத்துப்பூச்சிகள் அழியும் நிலையில் உள்ளதாக பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

இதையடுத்து வண்ணத்துப்பூச்சிகள் குறித்து பழநி, சிறுமலை பகுதிகளில் காந்திகிராம பல்கலை உயிரியல் பேராசிரியர் ராமசுப்பு தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்தனர்.பேராசிரியர் ராமசுப்பு கூறியதாவது: மலைப்பகுதிகளில் அயல்நாட்டு தாவரமான லண்டனா பரவலால் வண்ணத்துப்பூச்சிகள் அதிகரித்துள்ளன. இவை பெரும்பாலும் உயரம்

குறைந்த தாவரங்களின் மகரந்த சேர்க்கைக்கு உதவுகின்றன. நீண்டநேரம் பூக்களில் தங்கி வீரியமிக்க மகரந்தத்தூளை பரவ செய்து அரிதான தாவரங்களை பாதுகாக்கின்றன. மரபணுமாற்றம் செய்த தாவரங்களின் மகரந்தத்தூள்களை வெறுத்து ஒதுக்குகின்றன. பழநி, சிறுமலை பகுதியில் வறட்சியால் வண்ணத்துப் பூச்சிகள் குறைந்துள்ளன. எறும்புகள், பறவைகள், ஈக்கள், குளவிகள் போன்றவை வண்ணத்துப்பூச்சிகளின் புழுக்களை இரையாக உண்கின்றன. பூச்சிக்கொல்லி மருந்துகளும் அவற்றின் புழுக்களை அழிக்கின்றன. அதிகப்படியான காற்றும் வண்ணத்துப்பூச்சிகள் எண்ணிக்கையை குறைக்கின்றன. இவை குறைந்து வருவதால் காடுகளின் சுற்றுச்சூழலும் பாதிக்கப்பட்டுள்ளது, என்றார்.

## 45 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தி செய்ய அரசு இலக்கு

தேனி:தமிழகத்தில் நடப்பு ஆண்டு 145 லட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது.தமிழகத்தில் மொத்தம் 45 லட்சம் எக்டேர் நிலங்கள் உள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து மொத்தம் 111 லட்சம் டன் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆந்திரா, கேரள மாநிலங்களை விட தமிழகத்தின் மொத்த உணவு தானியங்களின் உற்பத்திதிறன் அதிகம்.நடப்பு ஆண்டு பருவமழை கடந்த ஆண்டுகளை விட அதிகம் பெய்துள்ளது. எனவே நடப்பு ஆண்டிற்கான உணவு உற்பத்தி இலக்கு குறியீடும் 145 லட்சம் டன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விவசாயம், தோட்டக்கலை, விவசாய பொறியியல், கால்நடை, விவசாய விற்பனைத்துறைகளை இணைத்து புதிய செயல்திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.ஐந்து துறைகளை சார்ந்த அதிகாரிகள் குழு மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டு, விவசாயிகளை சந்தித்து இதற்கான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

மாவட்டந்தோறும் வழங்கப்பட்டுள்ள இலக்கினை எட்ட அரசு உத்தரவிட்டுள்ளது.

## துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.145: வரலாறு காணாத விலை உயர்வு

தமிழகத்தில், பருப்பு உற்பத்தி ஓரளவு இருந்தாலும், தேவைக்கு ஏற்ற அளவில் இல்லாததால், குஜராத், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களை நம்ப வேண்டியுள்ளது. கென்யா, தான்சானியா, பர்மா போன்ற வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதியாகிறது.வெளி மாநிலங்களில், அறுவடை நேரத்தில் பெய்த மழையால், உற்பத்தி பாதிக்கப்பட்டு, தமிழகத்திற்கு வரத்து குறைந்துள்ளதால், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு விலை வெகுவாக உயர்ந்துள்ளது.
*கடந்த வாரம், 100 கிலோ முதல் ரகம், 10,900 ரூபாய், இரண்டாம் ரகம், 9,800 ரூபாயாக இருந்த துவரம் பருப்பு விலை, நேற்று, முதல் ரகம், 12,900 ரூபாய்க்கும், இரண்டாம் மதுரை:மதுரை வரும் சுற்றுலா பயணிகளை திருப்பரங்குன்றத்திற்கும் வரவழைக்க அங்குள்ள மலைப்பகுதியில் தோட்டம் அமைக்க பரிசீலிக்கப்படுகிறது.திருப்பரங்குன்றம் மலையில் 'ரோப் கார்' அமைப்பதற்கான ஆய்வு சில ஆண்டுகளுக்கு முன் நடந்தது.

'ரோப் கார்' பயணத்தின் போது சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் 'சைட் சீன்ஸ்' இங்கு இல்லாததால் இத்திட்டம் கைவிடப்பட்டது.தற்போது உள்ள மலைப்பாதையை ஒட்டிய பகுதி வழியாக காசி விஸ்வநாதர் கோயிலுக்கு 'ரோப் கார்' இயக்கம் குறித்து மீண்டும் ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டமும் கைவிடப்பட்டது. இதற்கு மாற்றாக, இங்குள்ள மலையில் மலைத்தோட்டம் அமைத்து அழகுபடுத்தும் வாய்ப்புகள் குறித்து அப்போது ஆராயப்பட்டது. ஆனால் மலையடிவாரத்தில் 'எக்கோ பார்க்' அமைக்கப்பட்டு நீரூற்று நடன நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மலை அருகில் விமான நிலையம் உள்ளதால், இந்த மலையில் தோட்டங்கள் அமைத்து இரவிலும் மின்ஒளியில் ஜொலிக்க கூடிய வசதிகளை ஏற்படுத்தினால், விமானத்தில் இருந்தும் இந்த மலைக்காட்சிகளை வியந்து ரசிக்கும் வாய்ப்புகள் உள்ளதாகவும், வெளிநாடுகளில் இது போல் இருப்பதாகவும் சுற்றுலா ஆர்வலர்கள் அரசுக்கு தெரிவித்தனர்.தொல்லியல் துறையின் பராமரிப்பில் சில பகுதிகள் இம்மலையில் இருந்தாலும், அறநிலையத்துறையின் முழு கட்டுப்பாட்டில் மலை உள்ளது. தொல்லியல் துறை, வனத்துறை, சுற்றுலாத்துறை இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்தலாம்.அதிகாரிகள் கூறுகையில்,

"திருப்பரங்குன்றத்தில் இயற்கையை மேம்படுத்தும் வகையில் நந்தவனம், பூங்கா, சரவணப்பொய்கை என பல பகுதிகள் உள்ளன. மலை மீது தோட்டம் அமைப்பது சவாலானதாகவும்,புதுமையாகவும் இருக்கும். தமிழகத்தில் இது ஒரு புது முயற்சியாகவும் இருக்கும். இத்திட்டம் தொடர்பாக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்" என்றனர்.

## குன்றத்தில் சுற்றுலா பயணிகளை ஈர்க்க 'ரோப் கார்' திட்டத்திற்கு பதில் மலைத்தோட்டம்

ரகம், 11,900 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. சில்லரையில், முதல் ரகம் 1 கிலோ, 115 ரூபாயில் இருந்து, 135 ரூபாயாகவும், இரண்டாம் ரகம், 105 ரூபாயில் இருந்து, 125 ரூபாயாகவும், பாக்கெட் பருப்பு விலை, 125 ரூபாயில் இருந்து, 145 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.*கடந்த வாரம், 100 கிலோ முதல் ரகம், 10,500 ரூபாய்; இரண்டாம் ரகம், 9,500 ரூபாய்க்கும் விற்ற உளுந்தம் பருப்பு, நேற்று, மூடைக்கு, 800 ரூபாய் உயர்ந்து, முதல் ரகம், 11,300 ரூபாய், இரண்டாம் ரகம், 10,300 ரூபாய்க்கும் விற்கிறது. சில்லரையில் 1 கிலோ, முதல் ரகம், 110 ரூபாயில் இருந்து, 120 ரூபாயாகவும், இரண்டாம் ரகம், 100 ரூபாயில் இருந்து, 110 ரூபாய், பாக்கெட் பருப்பு, 120 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

இதுகுறித்து, தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியதாவது:

தமிழகத்தில், 1 கிலோ துவரம் பருப்பு, 135, 145 ரூபாய் என்பது வரலாறு காணாத விலை. மகாராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் அறுவடையின் போது, மழை பெய்ததால், உற்பத்தி குறைந்து, தமிழகத்திற்கு வரத்து குறைந்துள்ளது. அமெரிக்க டாலர் மதிப்பில் நிலையற்ற தன்மையால், வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி குறைந்துள்ளது.

'ஆன்-லைன்' வர்த்தகம் விலை உயர்வும் ஒரு காரணம். விலை உயர்வை கருத்தில் கொண்டு, பெரும் நிறுவனங்கள் மொத்தமாக வாங்கி பதுக்கி வைத்துள்ளன. பதுக்கல், 'ஆன்-லைன்' வர்த்தகத்தை தடுக்காவிட்டால், 1 கிலோ, 150 ரூபாய் வரை உயர்ந்தாலும் ஆச்சரியமில்லை. இவ்வாறு, அவர் கூறினார்.

இந்திய நுகர்வோர் சங்க தொடர்பு அலுவலர் சோமசுந்தரம் கூறுகையில்,"பருப்பு தட்டுப்பாடைக் கருத்தில் கொண்டு, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய சாதகமான சூழலை மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும். அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ், பதுக்கலையும் தடுத்தால் தான் சிக்கல் தீரும்," என்றார்.

## கால்நடை வளர்ப்போர் சந்திப்பு நிகழ்ச்சி

புதுச்சேரி:சிவராந்தகத்தில், கால்நடை வளர்ப்போர் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது.கால்நடை பராமரிப்புத் துறை இயக்குனர் பத்மநாபன் தலைமை தாங்கி, விவசாய நிலங்கள் குறைந்து வரும் இன்றைய சூழ்நிலையில், கால்நடை வளர்த்தால் அதிக லாபம் பெறலாம் என, தெரிவித்தார். நவீன முறையில், கால்நடை வளர்ப்பு குறித்த யுக்திகளை விவசாயிகள் அறிந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.'இன்றைய கன்று, நாளைய பசு' என்ற தலைப்பில், டாக்டர் கிரிமெகர் பாபா, 'கால்நடைகளை தாக்கும் நோய்களும், தடுப்பு முறைகளும்' என்ற தலைப்பில் டாக்டர் பிரிதா, 'மாடுகளில் மலட்டுத்தன்மை நீக்கும் யுக்திகள்' என்ற தலைப்பில்,

மோகன் பேசினர்.கால்நடைத்துறை இணை இயக்குனர் ராஜ்மோகன், சிவராந்தகம் கால்நடை மருத்துவர் மோகன் பங்கேற்றனர்.

## 2,000 ஏக்கர் வெற்றிலை கொடிக்கால் கருகியதால் தவிப்பு: ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து அவதி

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், கடந்த இரண்டு ஆண்டாக நிலவிவரும் கடும் வறட்சியால், நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வெற்றிலை கொடிக்கால் காய்ந்து கருகிவிட்டதால், ஆயிரக்கணக்கானோர்வேலையிழந்துள்ளனர். விவசாயிகள்
பெரும் தவிப்புக்குள்ளாகி உள்ளனர்.

சேலம் மாவட்டத்தில், வாழப்பாடி அடுத்த, புழுதிக்குட்டை ஆணைமடுவு அணை, பாப்பநாயக்கன்பட்டி கரியகோவில் அணை பாசன பகுதிகள் மற்றும் கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் வெள்ளாறு, அருநூற்றுமலையில் உற்பத்தியாகும் வசிஷ்டநதியின் ஆற்றுப்படுகை கிராமங்களிலும், 2,000 ஏக்கர் பரப்பில் வெற்றிலை பயிரிடப்பட்டுள்ளது. இதில், கறுப்பு, வெள்ளை (தாம்பூல ரகம்) மற்றும் காபி கொடி என, உயர் ரக வெற்றிலையை, பாக்குத்தோப்பில் ஊடுபயிராகவும், அகத்தி மற்றும் கல்யாண முருங்கை மர நிழலில் கொடிக்கால் அமைத்தும், நீண்டகால பலன் தரும் பணப்பயிராக விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். இவற்றை, வாழப்பாடி அடுத்த, பெரியகிஷ்ணாபுரம் மற்றும் பேளூரில் இயங்கும் தனியார் வெற்றிலை கமிஷன் மண்டிகளுக்கு கொண்டு வந்து, விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். வியாபாரிகள், அதை தரம் பிரித்து, தமிழகம் மட்டுமின்றி, வெளிமாநிலங்களுக்கும் சப்ளை செய்கின்றனர். கடந்த இரு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து போனதால், வெற்றிலை சாகுபடி பகுதிகளில், கடுமையான வறட்சி நிலவுகிறது. அதனால், வாழப்பாடி, பேளூர், தும்பல், நரசிங்கபுரம், தம்மம்பட்டி, கெங்கவல்லி பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர்

பகுதியில் பயிரிடப்பட்டிருந்த வெற்றிலை கொடிக்கால், நீர்பாசனத்திற்கு வழியின்றி காய்ந்து கருகி அழிந்து விட்டது.

இதுகுறித்து, வெற்றிலை விவசாயிகள் கூறியதாவது: வெற்றிலை உற்பத்தி பாதிக்கப்பட்டு, கமிஷன் மண்டிக்கு விற்பனைக்கு வரத்து அடியோடு குறைந்து, அதன் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது. ஒரு மாதத்திற்கு முன், ஒரு ஒத்து (6,000 வெள்ளை வெற்றிலை), தலா, 2,000 ரூபாய்க்கு விலை போன நிலையில், கடந்த சில நாட்களாக, 3,000 ரூபாய் வரை விலை போகிறது. ஒரு ஒத்து கறுப்பு வெற்றிலை, அதிகபட்சமாக, 4,000 ரூபாய்க்கு விலை போகிறது. வெற்றிலை உற்பத்தி அடியோடு குறைந்து, உள்ளூர் தேவைக்கே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், வெற்றிலை ஏற்றுமதி தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால், வெற்றிலையை நம்பி பிழைப்பு நடத்தி வந்த விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் வெற்றிலை கொடிக்கால் தோட்ட தொழிலாளர்கள் என்று, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேலையிழந்து பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளும் வருமானமின்றி தவிப்புக்குள்ளாகி உள்ளனர். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## ரூ.12 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த பருத்தி ஏலத்தில், 12 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 790 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம்,

4,405, குறைந்த பட்சம், 3,796 ரூபாய், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4, 451 , குறைந்த பட்சம், 3, 897 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 6,195, குறைந்த பட்சம், 5,456 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 790 மூட்டை பருத்தி, 12 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## டெல்டா பாசனத்துக்கு கல்லணையில் நீர் திறப்பு: அணையை ஒட்டிய பகுதியில் நெல் நடவு துவக்கம்

திருச்சி: சம்பா சாகுபடிக்கு, மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர், கல்லணைக்கு வந்ததை அடுத்து, நேற்று காலை, டெல்டா மாவட்ட பாசனத்துக்கு, அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணை சுற்றிய பகுதிய பகுதிகளில், சம்பா சாகுபடிக்காக, நடவுப் பணிகளும் ஜரூராக நடந்து வருகிறது.

தமிழகத்தில், ஆண்டுதோறும் ஜூன், 12ம் தேதி டெல்டா பாசனத்துக்காக, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். டெல்டா மாவட்டங்களில் மட்டும், 12 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்படும். நடப்பாண்டு, மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. கடந்த மாதம், கர்நாடகா மாநிலத்தில் பெய்த மழையினால், காவிரியில் தண்ணீர் வந்து, மேட்டூர் அணை நீர்மட்டம், 90 அடியை எட்டியது. இதையடுத்து, தமிழக முதல்வர் உத்தரவின்படி ஆகஸ்ட், 9ம் தேதி டெல்டா பாசனத்துக்கு, தண்ணீர் திறக்கப்பட்டது. கரூர் மாயனூர் தடுப்பணை, திருச்சி முக்கொம்பு மற்றும் கம்பரசம்பேட்டை தடுப்பணையை கடந்த தண்ணீர், நேற்று முன்தினம் இரவு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள கல்லணையை தொட்டது. இதையடுத்து, நேற்று காலை, 10 மணிக்கு, டெல்டா பாசனத்துக்கு, கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், திருச்சி மாவட்டத்தில் காவிரி பாசன பகுதி, கல்லணையை ஒட்டிய பகுதிகளில், ஏற்கனவே, பி.பி.டி., ரக நெல் விதைப்பு செய்து, நாற்றாங்கால் போட்டு இருந்தனர். கடந்த இரண்டு நாட்களாக, வயல்களில் நாற்று நடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். திருவளர்சோலை, மேல வெட்டி, உத்தமசீலி, கல்லணையை சுற்றிய பகுதிகளில் நடவு பணிகள் ஜரூராக நடந்து வருகிறது.

**முருங்கை காய் விலை 10 காசு: வாங்க ஆளில்லாததால் கவலை**

க.பரமத்தி: க.பரமத்தி பகுதியில், முருங்கைக்காய் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால், கட்டு ஒன்று, மூன்று ரூபாய்க்கும் கூட விற்க முடியாததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி பகுதியில், முக்கிய விவசாய தொழிலாக முருங்கைக்காய் உற்பத்தி உள்ளது. இப்பகுதியில், 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது. செடி, கொடி மற்றும் மரம் ஆகிய வகையில் உற்பத்தி செய்யப்படும் முருங்கைக்காய் நார்சத்து மிகுந்துள்ளது. உற்பத்தி செய்த முருங்கை காய்களை, விவசாயிகள் வாரச்சந்தை, மண்டி ஆகியவற்றின் மூலம் விற்பனை செய்கின்றனர். கடந்த ஒரு மாதத்துக்கு முன், 25 காய்கள் கொண்ட, ஒரு கட்டு, 250 ரூபாய்க்கு விற்பனையானது. சில நாட்களாக, ஒரு கட்டு, மூன்று ரூபாய்க்கு, காய் ஒன்று, 10 பைசாவுக்கும் விற்கப்படுவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி, அரவக்குறிச்சி அல்லது பரமத்தி பகுதியில் குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும், என்று கோரிக்கை எழுந்துள்ளது.

**கல்லணையில் இருந்து 10 ஆயிரம் கனஅடி நீர் திறப்பு: 9.89 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்**

தஞ்சாவூர்: ""டெல்டா மாவட்டங்களின் பாசனத்துக்காக, கல்லணையிருந்து திறக்கப்பட்டுள்ள தண்ணீர் மூலம், 9.89 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்,'' என, அமைச்சர் வைத்திலிங்கம் தெரிவித்தார்.

கடந்த, 9ம் தேதி, மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக திறக்கப்பட்ட, 13 ஆயிரம் கனஅடி நீர், தஞ்சை மாவட்டம், கல்லணையை வந்தடைந்தது. அந்த தண்ணீர், டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக, நேற்று திறந்து விடப்பட்டது. காலை, 10.15 மணிக்கு கல்லணை கரையில் உள்ள கருப்பண்ண ஸ்வாமிக்கு சிறப்பு பூஜை செய்த பின், அங்குள்ள ஆஞ்சநேயர், விநாயகருக்கு பூஜை நடந்தது. தொடர்ந்து அணையிலிருந்து காலை, 10.30 மணிக்கு அமைச்சர்கள் வைத்திலிங்கம், ஜெயபால், காமராஜ், சுப்பிரமணியன், விஜயபாஸ்கர், பூனாட்சி ஆகியோர் தண்ணீரை திறந்து விட்டனர். பிறகு, ஒன்பது வகையான நெல்மணி, பூக்கள் ஆகியவற்றை தண்ணீரில் தூவி வணங்கினர்.
அப்போது, அமைச்சர் வைத்திலிங்கம் கூறியதாவது: டெல்டா மாவட்ட பாசனத்திற்காக காவிரி, வெண்ணாறு ஆகியவற்றில் தலா, 4,000 கனஅடி வீதமும், கல்லணை கால்வாய், கொள்ளிடம் ஆகியவற்றில், தலா, 1,000 கனஅடி வீதம் மொத்தம், 10 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

காவிரி பாசன பகுதிகளில், கடைமடைக்கு தண்ணீர் சென்றடைந்த பின், காரைக்கால் பாசன பகுதிக்குரிய நீர் பங்கீடு செய்து அளிக்கப்படும். மேலும், தஞ்சை மாவட்டத்தில், இரண்டு லட்சத்து, 66 ஆயிரத்து, 875 ஏக்கரும், திருவாரூரில், மூன்று லட்சத்து, 75 ஆயிரத்து, 250 ஏக்கரும், நாகையில், மூன்று லட்சத்து, 47 ஆயிரத்து, 250 ஏக்கரும் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி நடக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு தேவையான நெல் விதைகள், உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் தெரிவித்தார். அரசு கொறடா மனோகரன்,

எம்.எல்.ஏ.,க்கள் ரெங்கசாமி, ரத்தின சாமி, துரைக்கண்ணு, பவுன்ராஜ், மாநகராட்சி மேயர் சாவித்திரி, மாவட்ட பஞ்., தலைவர் அமுதா, கலெக்டர்கள் சுப்பையன், பழனிச்சாமி, கணேஷ், மதிவாணன், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் அசோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## டெல்டாவுக்கு சம்பா சிறப்பு தொகுப்பு திட்டம்: விவசாயிகள் வாழ்வுரிமை மாநாட்டில் வலியுறுத்தல்

தஞ்சாவூர்: "காவிரி நடுவர் மன்ற தீர்ப்புப்படி, சம்பா சாகுபடிக்கு கர்நாடகத்திடமிருந்து தண்ணீர் பெற மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

தஞ்சையில், தமிழக காவிரி விவசாயிகள் சங்கம் சார்பில், விவசாயிகள் வாழ்வுரிமை மாநாடு நடந்தது. சங்கப் பொதுச் செயலாளர் பாண்டியன் தலைமை வகித்தார். டெல்டா மாவட்டங்களில், நான்கு ஆண்டுகளாக காவிரி நீர் கிடைக்காததால், குறுவை சாகுபடியை முற்றிலும் பாதித்துள்ளது. தற்போது, ஒரு போக சம்பா சாகுபடியும் செய்ய முடியுமா? என்ற அச்சம் விவசாயிகளிடத்தில் ஏற்பட்டுள்ளது. எனவே, காவிரி நடுவர் மன்ற தீர்ப்புப்படி, தமிழகத்துக்கு தர வேண்டிய தண்ணீரைப் பெறுவதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால், உச்ச நீதிமன்றத்தில், தமிழக அரசு அவசர வழக்குத் தொடுத்து, தண்ணீரைப் பெற்றுத்தர வேண்டும். டெல்டா மாவட்டங்களுக்கு, சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவிப்பதுடன், உழவு மானியம் மற்றும் முழு மானியத்தில் விதைகள் வழங்க வேண்டும். டெல்டா மாவட்டங்களில் பழுப்பு நிலக்கரி, மீத்தேன் வாயு, கச்சா போன்ற இயற்கை வளங்களை வெளிக்கொண்டு வருவதற்கு, ஓ.என்.ஜி.சி., கெயில் நிறுவனங்களுக்கு கொடுத்துள்ள அனுமதியை ரத்து செய்ய வேண்டும். மேலும், உணவு உற்பத்தி, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, காவிரி டெல்டாவை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க

வேண்டும். விவசாயிகளை தற்கொலையிலிருந்து பாதுகாக்க, வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் குழுப் பரிந்துரைகள் முழுவதையும் ஏற்று, விலை நிர்ணயம் செய்வதுடன், விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும், என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டில், காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செயலாளர் திருநாவுக்கரசர், எம்.ஏல்.ஏ., ரெங்கராஜன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## 65 ஆயிரம் மெட்ரிக் டன்: தானியம் உற்பத்திக்கு இலக்கு

பழநி:பழநிபகுதியில் இவ்வாண்டு 18 ஆயிரம் எக்டர் பரப்பளவில் 65 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு, தானிய உற்பத்தி செய்ய வேளாண்துறை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.பழநி வேளாண் உதவிஇயக்குனர் சுருளியப்பன் கூறியதாவது: தேசிய உணவு தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் பழநிசுற்றுப்பகுதியில் மட்டும் நெல், சிறுதானியம், பயறு வகையில் 65 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தியை இலக்காக வைத்து, கணக்கன்பட்டி, நெய்க்காரப்பட்டி, பாப்பம்பட்டி, காவலபட்டி உள்ளிட்ட பகுதிகளில் சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. வேளாண் உதவி அலுவலர்கள் மூலம் விவசாயிகளை நேரடியாக சந்தித்து, உணவு தானிய உற்பத்தியில் நவீன இயந்திர நடவுமுறைகள், தொழிநுட்பங்கள் குறித்து எடுத்துகூறி, நெல்லில் குறுவை, சம்பா, சிறுதானியத்தில் காரீப், ராபியும் பயறுவகை சாகுபடியை ஊக்கப்படுத்தப்படுகிறது. மேலும் ஒவ்வொரு திட்டத்திலும் மத்திய, மாநில அரசு மானியம் பெற ஆதார், வாக்காளர் அட்டை அவசியம் என விவசாயிகளிடம் வலியுறுத்தி வருகிறோம்," எனக் கூறினார்.

## கிலோ ரூ. 5க்கு கொள்முதல்:வெண்டை விவசாயிகள் கவலை

ரெட்டியார்சத்திரம்:திண்டுக்கல் அரு@க ரெட்டியார்சத்திரம், கொத்தப்புள்ளி, காமாட்சிபுரம், பங்காருபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 600 ஏக்கருக்கும் கூடுதலான பரப்பில், வெண்டை சாகுபடி நடக்கிறது.

விளைச்சல் குறைந்துள்ள நிலையில், போதிய விலை கிடைக்கவில்லை. திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுகளில் மிகக்குறைவான விலைக்கு கொள்முதல் செய்யப்படுவதால், விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

பங்காருபுரம் விவசாயி பெருமாள் கூறுகையில், ""மூன்று மாதங்களுக்கு முன், வெண்டை சாகுபடியை துவக்கினேன். ஒரு ஏக்கருக்கான விதையின் மதிப்பு 3 ஆயிரத்து 800 ரூபாயாக இருந்தது. பராமரிப்பு உள்பட, இதுவரை ஏக்கருக்கு 6 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. போதிய நீர் ஆதாரம் கிடைக்காமல், விளைச்சல் 60 சதவீதமாக குறைந்துள்ளது. இந்நிலையில் மார்க்கெட்களில் கிலோ 5 முதல் 7 ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர். செலவின தொகைகூட கிடைக்காத நிலையில் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது," என்றார்.

## நெல் வயல்களில் எலித் தொல்லை:தடுக்க விவசாயத்துறை ஆலோசனை

கம்பம்:நெல் வயல்களில் எலித் தொல்லை அதிகரித்துள்ளது. எலிகளை வயல்களில் வராவிடாமல் தடுப்பது மற்றும் எலிகளை தடுக்கும் முறைகள் பற்றி விவசாயத்துறை ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

கம்பம் உதவி இயக்குனர் அசோகன் கூறியதாவது: நெல் வயல்களில் எலிகள் இருந்தால், இளம் நாற்றுக்கள் துண்டு துண்டாய் வெட்டப்பட்டு காணப்படும். பயிர் முதிர்ச்சி நிலையில் கதிர்கள் கத்தரிக்கப்பட்டு பொந்துகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். வயல்களில் எலித்தொல்லையில் இருந்து விடுபட வரப்புகளை குறுகலாக அமைக்கவேண்டும். ஆட்டுக்கிடை அமைத்தால் எலிகள் வராது. நொச்சி மற்றும் எருக்கலை செடிகளை வயலை சுற்றி வேலிப்பயிராக நட்டால் எலிகள் ஓடிவிடும். சணப்பு பூவை சிறிய துண்டுகளாக்கி வயல்களில் ஆங்காங்கே போட்டால், அதிலிருந்து கிளம்பும் வாடையால் எலிகள் ஓடிவிடும். பசுஞ் சாணத்தை வரப்புகளில் போட்டாலும் எலிகள் இருக்காது.

நடவு செய்த 3 முதல் 4 வாரங்களுக்குள் நச்சு உணவு பொறியாக ஜிங்க் சல்பேட் அல்லது புரோமோடையலோன் வைக்க வேண்டும். இது தவிர தஞ்சாவூர் பொறிகள் அல்லது மூங்கில் பொறிகள் ஒரு எக்டருக்கு 100 எண்ணம் வைக்கலாம். அலுமினியம் பாஸ்பேட் ஒரு பொந்துக்கு இரண்டு மாத்திரை வீதம் வைத்து எலி நுழையும் வாயிலை நன்றாக சேற்றால் மூடி விட வேண்டும்.

வார்பரின் 0.5 சதவீதம் உள்ள ஒரு பகுதியை 19 பகுதிகளான பொறிக்கப்பட்ட சோளம், அரிசி, கருவாடு ஆகியற்றுடன் கலந்து எலி நடமாடும் இடங்களில் வைக்கவேண்டும். ஆந்தை மற்றும் பிற பறவைகள் அமர்வதற்கு எக்டருக்கு 40 முதல் 50 குச்சிகள் நட்டு வைக்கவேண்டும். அந்த குச்சிகளில் பனை ஓலைகளை கட்டி விட வேண்டும். காற்று அடிக்கும் போது அந்த ஓலைகளில் இருந்து கிளம்பும் ஒலியை கேட்டு எலிகள் ஓடி விடும். மேலும் விபரங்களுக்கு கம்பம் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விருதுநகர்:மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆக.,21 பகல் 11 மணிக்கு விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ராஜாராமன் தலைமையில் நடக்கிறது.
விவசாயம் தொடர்பான பொதுவான கோரிக்கைகளை நேரடியாக மனுமூலம் கொடுத்து பயன்பெறும்படி, கலெக்டர் தெரிவித்துள்ளார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விளைச்சல் அமோகம், விலையும் கூடுதல்: சாமந்திப்பூ விவசாயிகள் மகிழ்ச்சி**



நிகழாண்டு சாமந்திப்பூ விளைச்சல் அமோகமாக இருப்பதாலும், தற்போது ஆடித் திருவிழா நடைபெற்று வருவதால் விலையும் கூடுதலாகக் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒரே பயிர்களை மீண்டும் மீண்டும் பயிர் செய்வதால், பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து குறைந்து, பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறைவாகக் கிடைக்கிறது.

இதைத் தவிர்க்க குறுகியகால மாற்று வழிப் பயிர்களை சாகுபடி செய்து வருவதன் மூலம் மண்ணின் சத்துகள் பாதுகாக்கப்பட்டு நல்ல பலனை ஈட்ட முடியும்.

இதனால், பாரம்பரியப் பயிர்களான நெல், கேழ்வரகு, கரும்பு, மரவல்லி ஆகியவற்றை அவ்வப்போது தவிர்த்து குறுகிய காலத்தில், குறைந்த தண்ணீர், குறைந்த பராமரிப்பு செலவு கொண்ட பயிர்களான காய்கறிகள், கீரை வகைகள், பூ வகைகளை சாகுபடி செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றனர். அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், பூண்டி, ஊத்துக்கோட்டை, எல்லாபுரம் ஆகிய ஒன்றியங்களுக்கு உள்பட்ட ஊத்துக்கோட்டை, பூண்டி, பிளேஸ்பாளையம், நம்பாக்கம், மோவூர், தாராட்சி, பெரம்பூர், பெரியபாளையம், வெங்கல், தாமரைக்குப்பம், குருவாயல், புன்னப்பாக்கம், கன்னிகைபேர், அதன் சுற்று வட்டாரப்

பகுதிகளில் சாமந்திப்பூ சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நடவு செய்த இரண்டு மாதங்களில் பூப்பூக்கத் தொடங்கி பலன் கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் நாள் ஒன்றுக்கு சுமார் 50 கிலோ சாமந்திப்பூ வரை அறுவடை செய்து கோயம்பேடு சந்தைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

பூ வரத்து, விசேஷ தினங்கள் ஆகியவற்றைப் பொருத்து விலை நிர்ணயம் செய்யப்படும். சீசன் நேரங்களில் ஒரு கிலோ பூ ரூ.30 முதல் ரூ.50 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. அப்போது, கணிசமான வருவாய் ஈட்டி வரும் விவசாயிகளுக்கு, சீசன் இல்லாதபோது வருவாய் குறையும். ஆனால், தற்போது சுற்று வட்டாரப் பகுதிகளில் ஆடித் திருவிழா நடைபெற்று வருவதால் ஒரு கிலோ பூ ரூ.25 முதல் ரூ.40 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், கடந்த ஏப்ரல் மாதத்தில் கடும் விலை வீழ்ச்சியை சந்தித்து கவலையில் இருந்த விவசாயிகள், தற்போது நல்ல விலை கிடைப்பதால் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**மீனவர்கள் வலையில் சிக்கிய 200 கிலோ மீன்!**



தூத்துக்குடி விசைப்படகு மீனவர் வலையில் சிக்கிய மருத்துவ குணமுடைய 200 கிலோ எடை கொண்ட சுறா மீன் 38 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானதால் மீனவர்கள் மகிழ்சியடைந்தனர்.

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் இருந்து புதன்கிழமை அதிகாலை நூற்றுக்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். இரவில் கரைக்கு திரும்பிய மீனவர்களுக்கு பெரிய அளவில் மீன்கள் கிடைக்கவில்லை. இருந்த போதிலும் தூத்துக்குடியைச் சேர்ந்த நிக்கோலஸ்பாபு என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் வலைவீசிய மீனவர்கள் வலையில் ஏறத்தாழ 200 கிலோ எடையில் மருத்துவ குணம் கொண்ட சுறாமீன் சிக்கியது.

7 அடி நீளம் கொண்ட அந்த மீனை புதன்கிழமை இரவு மீன்பிடி துறைமுத்தில் மீன் வியாபாரிகள் போட்டி போட்டி ஏலம் கேட்டனர். இறுதியில் அந்த சுறா மீன் 38 ஆயிரம் ரூபாய் விலைக்கு ஏலம் போனது. இதனால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். இதுபோன்ற ராட்சத சுறா மீன்கள் எப்போதாவதுதான் வலையில் சிக்கும் என மீனவர்கள் தெரிவித்தனர்.

### தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு

வெப்பச்சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை ஆங்காங்கே இடியுடன்கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வெப்பச்சலனம் நீடிப்பதால், தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை ஆங்காங்கே இடியுடன்கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன்கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரியாக இருக்கும். அடுத்து வரும் இரண்டு நாள்களுக்கும் தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.

### திண்டுக்கல்லில் 23 பேரூராட்சிகளிலும் வீதிதோறும் மாதிரி மாடித் தோட்டம்

பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 23 பேரூராட்சிகளுக்குள்பட்ட ஒவ்வொரு வீதியிலும் 2 மாதிரி மாடித் தோட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதுமுள்ள 528 பேரூராட்சிகளிலும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி முதல் பிளாஸ்டிக் இல்லாத நிலையை உருவாக்குவதற்காக, பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 23 பேரூராட்சிகளிலும் பொதுமக்களுக்கு பல்வேறு வழிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதில், 40 மைக்ரானுக்கு கீழ் உள்ள பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்துவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும் என வர்த்தர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 23 பேரூராட்சிகளிலும் 1.05 லட்சம் வீடுகள் உள்ளன. வீடுகளில் சேரிக்கப்படும் குப்பைகளைச் செடிகளுக்கு உரமாக்கும் வகையில் மாடித் தோட்டம் அமைத்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது குறித்து, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்தது: பொதுமக்களுக்கு முன்னுதாரணமாக திகழும் வகையில், முதல்கட்டமாக 23 பேரூராட்சி அலுவலகத்திலும் மாடித் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக, 23 பேரூராட்சிகளில் உள்ள ஒவ்வொரு தெருவிலும் தலா 2 வீடுகளில் மாடித் தோட்டம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிளாஸ்டிக் ஒழிப்பு முயற்சியின் ஒரு பகுதியாக, தனியார் பங்களிப்புடன் துணிப் பைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது வரை, 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணிப் பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு வீட்டிலும் மக்கும் குப்பைகளை சேகரித்து, இயற்கை உரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளும் விரைவுப்படுத்தப்படும் என்றார் அவர்.

தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களை விற்பனை செய்யும் மொத்த விற்பனையாளர்களுக்கு ரூ. 1 லட்சம் வரையிலும், பொருள்களை வழங்க பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்தும் வர்த்தர்களுக்கு ரூ.1000 வரையிலும் அபராதம் வசூலிக்கப்படும். இந்த நடைமுறை செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என்றார் உதவி இயக்குநர் ராஜேந்திரன்.

## 50 அடிக்கும் கீழே குறைந்துள்ள வைகை அணையின் நீர்மட்டம்

வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்து வருவதால், அணையின் நீர் மட்டம் 50 அடிக்கும் கீழாகக் குறைந்துள்ளது.தேனி மாவட்டம், மூலவைகை மற்றும் முல்லைப் பெரியாறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் மழையின் மூலம் வைகை அணைக்கு நீர்வரத்து இருக்கும். தற்போது, மூலவைகை பகுதியில் போதிய மழை பெய்யாததால், வைகை அணைக்கு நீர் வரத்து இல்லை.

ஆனால், முல்லைப் பெரியாறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை பெய்ததால், நீர்வரத்து ஏற்பட்டது. எனவே, அங்கிருந்து தமிழகப் பகுதிக்கு 1300 கனஅடிக்கும் மேல் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால், வைகை அணைக்கு 1000 கன அடிக்கு மேல் நீர் வரத்து இருந்ததால், அணையின் நீர் மட்டம் 52 அடி வரை உயர்ந்திருந்தது.

இந்நிலையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தற்போது மழை இல்லாததால், வைகை அணைக்கு நீர் வரத்து இல்லை. எனவே, கடந்த ஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது.

இதனால், வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. மேலும், இங்கிருந்து மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டப் பாசனத்துக்கு 900 கன அடியும், மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்துக்கு 60 கனஅடி என மொத்தம் 960 கனஅடி தண்

## விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம்

உடுமலை அருகே சாமராயபட்டியில் தென்னை விவசாயிகளுக்கு வியாழக்கிழமை மானிய விலையில் உரம் வழங்கப்பட்டது.

தென்னை வளர்ச்சி வாரியத்தின் மாதிரி செயல் விளக்கப் பண்ணை திட்டத்தின் கீழ் சாமராயபட்டி, மலையாண்டிக்கவுண்டனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 விவசாயிகளுக்கு ரூ. 17 லட்சம் மதிப்புள்ள உரங்கள் இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன.

மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு, இந்த உரங்களை விவசாயிகளுக்கு வழங்கினார். மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் டி.ஜெயமணி, செயலாளர் சி.ராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நடவு இயந்திரம் வாங்க ரூ. 2 லட்சம் மானியம்

விவசாயிகள் சொந்தமாக நடவு இயந்திரம் வாங்க ரூ.2 லட்சம் வரை மானியம் வழங்கப்படும் என்று மேற்கு ஆரணி வேளாண் உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கூறினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில், நெல் நடவு இயந்திரத்துக்கு ரூ.2 லட்சம் வரை மானியம் வழங்கும் திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

சிறு, குறு விவசாயிகள், மகளிர், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 50 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியமும் வழங்கப்பட உள்ளன.

ஏப்ரல் 2015 முதல் இதுநாள் வரை தாங்களே முழு விலைக்கு நடவு இயந்திரம் வாங்கியிருந்தாலும், அதற்குரிய ரசீது, இதர ஆவணங்களை சமர்ப்பித்து உரிய மானியத் தொகையை நேரடியாக தங்கள் வங்கிக் கணக்கில் பெற்றுகொள்ளலாம். முன்னுரிமை அடிப்படையிலும் மானியம் வழங்கப்படும்.

இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டருக்கு ரூ.3ஆயிரம் மானியம் வழங்கும் திட்டமும் செயல்பட உள்ளது. இதற்காக வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகலாம் என்றார் சாந்தி.

தண்டராம்பட்டில்...

தண்டராம்பட்டு ஆக. 13: இதேபோல், தண்டராம்பட்டு வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் மானிய உதவிகள் தொடர்பாக வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பித்தால் பின்னேற்பு மானியம் வழங்கப்படும் என வேளாண்மை உதவி இயக்குநர் அ.பாலா தெரிவித்துள்ளார்.

### பழங்கள், காய்கறிகளில் மதிப்புக் கூட்டுதல், தொழில்நுட்பப் பயிற்சி

தருமபுரியில் அம்மா பண்ணை மகளிர் குழுக்கள், விவசாயிகளுக்கு பழங்கள், காய்கறிகளில் மதிப்பு கூட்டுதல் குறித்த தொழில் நுட்பப் பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

அட்மா திட்டத்தின் கீழ் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் நல்லனஅள்ளி, வெள்ளாளப்பட்டி, சோலைக் கொட்டாய், ஏலகிரியான் கொட்டாய், மேல்பூரிக்கல் கிராமங்களில் உள்ள அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள், எம்.பி.க்கள் தத்தெடுப்புக் கிராமங்களான பழைய தருமபுரி, கோணங்கி நாயக்கனஅள்ளி, பாலவாடியைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் தலைமை வகித்தார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை துணை இயக்குநர் காளியப்பன், நல்லம்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) வ.அமுதவள்ளி பயிற்சியைத் துவக்கி வைத்தார்.

பழங்கள், காய்கறிகள், சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டி விற்பனை செய்யும் முறைகள், தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் ஜோதிலட்சுமி பயிற்சியளித்தார்.

வேளாண் விளை பொருள்கள் தரம் பிரித்தல், அறுவடைக்குப் பின் சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து விற்பனை செய்யும் முறைகள் குறித்து

வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை வேளாண் அலுவலர் சுப்பிரமணியன் எடுத்துரைத்தார்.

**உணவுப் பதப்படுத்தல் பயிற்சி**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்திய உணவுப் பதப்படுத்தும் அமைச்சகத்தின் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் கீழ் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறையின் மூலம் உணவு பதப்படுத்தல் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

எலுமிச்சங்கிரி வேளாண் அறிவியல் மைத்தில் பயிற்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் விவசாயிகள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் என 80 பேருக்கு பயிற்சி அளிக்கப்படும். ஒரு குழுவுக்கு 20 பேர் என

4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு 10 நாள்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதன்முதலாகத் தொடங்கப்பட்டுள்ள இம்மையத்தின் மூலம் காய்கறிகள், பழங்களைப் பதப்படுத்துதல், பேக்கரி பொருள்கள் தயாரிப்பு, பாலில் மதிப்புக் கூட்டுப் பொருள்களைத் தயாரித்தல், மசாலா பொருள்களைத் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**"சம்பா சாகுபடிக்கு இறுதி வரை தண்ணீர் கிடைக்க நடவடிக்கை தேவை**

சம்பா சாகுபடிக்கு இறுதி வரை தண்ணீர் கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதுகுறித்து தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் துணைத் தலைவர் வெ. ஜீவகுமார் தெரிவித்தது:

அண்மைக் காலத்தில் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து குறைவாக இருக்கும் நிலையில், பாசனத்துக்காகத் தண்ணீர் திறப்பது முதல் முறையாக இருக்கிறது. இதுபோல, நீர் இருப்பும் குறைவாக இருக்கிறது.

கர்நாடகத்தில் இரு அணைகள் கட்டும் முயற்சியைத் தடுப்பதற்கான நடவடிக்கையைத் தமிழக அரசு மேற்கொள்கிறது. ஆனால், நிகழ் சம்பா பருவத்துக்குத் தேவையான தண்ணீரைப் பெற இதுவரை எந்தவித

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், சம்பா சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் மத்தியில் இறுதி வரை தண்ணீர் கிடைக்குமா என்ற அச்சம் நிலவுகிறது. எனவே, காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்புப்படி கர்நாடகத்திடமிருந்து தண்ணீர் பெறுவதற்கான நடவடிக்கையைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றார்.உழவர் உரிமை இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் சீ. தங்கராசு தெரிவித்தது: ஆறு, வாய்க்கால்களில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படாததால் கடந்த காலங்களில் கடைமடைப் பகுதி வரை தண்ணீர் முழுமையாகச் சென்றடையவில்லை. எனவே, நிகழாண்டில் கடைமடைப் பகுதி வரை தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேட்டூர் அணையில் நீர் இருப்புக் குறைவாக இருப்பதால், டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்குத் தேவையான தண்ணீரை கர்நாடகத்திடமிருந்து பெறத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு கடன் சங்கங்களில் அனைவருக்கும் பயிர்க் கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் தங்கராசு.

## 21இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆக. 21 ஆம் தேதி நடைபெறும் என மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நிஜாமுதீன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: விவசாயிகள் குறைதீர் கூட்டம் இம்மாதம் 21 ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் விவசாயிகளிடமிருந்து ஜூலை மாத குறைதீர் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும் விவசாயம் தொடர்பான கோரிக்கைகளும் மாவட்ட ஆட்சியரால் பெறப்படும். எனவே இக்கூட்டத்தில் விவசாயிகள் திரளாக கலந்துகொள்ளலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை மருத்துவக் கல்லூரியில் அமைச்சர் ஆய்வு**

திருநெல்வேலியை அடுத்த ராமையன்பட்டியில் உள்ள திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் புதிய கட்டடங்கள், வசதிகளை கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது உறுப்புக் கல்லூரியாக திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இக் கல்லூரிக்காக ராமையன்பட்டியில் 139.21 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அனைத்து வசதிகளும் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

கறவை மாடுகள், ஆடுகள், கோழி வளர்ப்புப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரியை தமிழக முதல்வர் ஜெயலலிதா 9.10.12இல் திறந்துவைத்தார்.

கல்லூரிக்கான அனைத்துக் கட்டுமானப் பணிகளும் இரு கட்டங்களாக நடைபெற்றன. இதையடுத்து, புதிய கட்டடங்களை முதல்வர் ஜெயலலிதா 15.7.15இல் திறந்துவைத்தார்.

இந்நிலையில், கல்லூரியில் உள்ள அடிப்படை வசதிகள், புதிய கட்டடங்களை தமிழக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா, வியாழக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், கல்லூரியின் பல்வேறு துறைகளையும் பார்வையிட்ட அவர், பேராசிரியர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

மலர் வெளியீடு: விழாவில் மலரை வெளியிட்டு டி.கே.எம்.சின்னையா மேலும் பேசியதாவது:

தமிழகத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதால் கால்நடை மருத்துவர்களின் தேவையும் அதிகரிக்கிறது. தமிழகத்தில் கால்நடை மருத்துவம் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு எளிதில் கிடைத்து வருகிறது. தமிழகத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டில் 800 கால்நடை மருத்துவர்களுக்கு அரசுப் பணி கிடைத்துள்ளது. இதுதவிர 700 பேர் கால்நடை ஆய்வாளர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கால்நடை மருத்துவப் படிப்பை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. புதிதாக 2 கல்லூரிகள் தொடங்கப்பட்டதோடு அங்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கு உடனடியாக நிதி ஒதுக்கி மாணவர்கள் பலன்பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும் கூடுதலாக 20 மாணவர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

முன்னதாக பேராசிரியர் இரா.ராம்பிரபு வரவேற்றார். கல்லூரி முதல்வர் சே.பிரதாபன் ஆண்டறிக்கை வாசித்தார். ஆட்சியர் மு.கருணாகரன் தலைமை வகித்தார். கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் சு.திலகர், சட்டப்பேரவை உறுப்பினர்கள் நயினார்நாகேந்திரன் (திருநெல்வேலி), ச.முத்துசெல்வி (சங்கரன்கோவில்), ஏ.நாராயணன் (நான்குனேரி), கோபால்சாமி (ராஜபாளையம்) ஆகியோர் பேசினர்.

மானூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கல்லூர் இ.வேலாயுதம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ச.பரமசிவஜயப்பன், ராமையன்பட்டி ஊராட்சித் தலைவர் வெ.ராமலட்சுமி சூர்யா பாண்டியன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பதிவாளர் டி.ஜே.ஹரிகிருஷ்ணன் உள்பட பலர் கலந்துகொண்டனர். பேராசிரியர் ம.செல்லப்பாண்டியன் நன்றி கூறினார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## துவரம்-உளுத்தம் பருப்பு விலை உயர்வு பாசுமதி அரிசி, எண்ணெய் விலைகள் அதிரடி சரிவு



சென்னை,

துவரம்- உளுத்தம் பருப்பு விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. பாசுமதி அரிசி, எண்ணெய் விலைகள் அதிரடியாக சரிந்துள்ளது.

விளைச்சல் குறைவு

கர்நாடகா, ஆந்திரா ஆகிய அண்டை மாநிலங்களில் இருந்தும், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் உள்பட வடமாநிலங்களில் இருந்தும் தமிழ்நாட்டுக்கு துவரம்-உளுத்தம் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

பருவமழை காரணமாக தற்போது அங்கு பருப்பு விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. இதனால் அவற்றின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் துவரம் பருப்பு

மூட்டைக்கு(100 கிலோ) ரூ.2 ஆயிரமும், உளுத்தம் பருப்பு ரூ.800-ம் விலை அதிகரித்துள்ளது.

விலை உயர்வு குறித்து தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி. சொரூபன் கூறியதாவது:-

உள்நாட்டில் விளைச்சல் குறைவு, கென்யா-தான்சானியா ஆகிய வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி நிறுத்தம் போன்ற காரணங்களால் துவரம்-உளுத்தம் பருப்பு விலை கிடுகிடுவென உயர தொடங்கி உள்ளது.

கிலோ ரூ.145-க்கு விற்பனை

சில்லரை விலையில் கடந்த வாரம் ரூ.115-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ துவரம் பருப்பு இன்றைய நிலவரப்படி(நேற்று) ரூ.135-க்கும், பாக்கெட் விலையில் ரூ.145-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

ரூ.110-க்கு விற்பனையான ஒரு கிலோ உளுத்தம் பருப்பு, ரூ.120-க்கும், பாக்கெட் விலையில் ரூ.125-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இது வரலாறு காணாத விலை உயர்வு ஆகும்.

துவரம்-உளுத்தம் பருப்பு விலை ராக்கெட் வேகத்தில் சென்றாலும், பாசி பருப்பு, கடலை பருப்பு விலை குறைந்துள்ளது.

முதல் ரக கடலை பருப்பு கிலோ ரூ.75-லிருந்து ரூ.65-ஆகவும், இரண்டாம் ரகம் ரூ.65 லிருந்து ரூ.60-ஆகவும் விலை குறைந்துள்ளது. ரூ.115-க்கு விற்பனையான ஒரு கிலோ பாசி பருப்பு ரூ.105-க் கும், பாக்கெட்டில் ரூ.110-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

பாசுமதி அரிசி- எண்ணெய் விலை சரிவு

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளதால் எண்ணெய் விலை சரிந்துள்ளது.

கடந்த வாரம் ரூ.55-க்கு விற்பனையான ஒரு லிட்டர் பாமாயில் ரூ.49-க்கும், ரூ.220-க்கு விற்பனையான ஒரு லிட்டர் அக்மார்க் நல்லெண்ணெய் ரூ.180-க்கும், ரூ.100-க்கு விற்பனையான ஒரு லிட்டர் விளக்கு ஏற்றும் நல்எண்ணெய் ரூ.75-க்கும், ரூ.220-க்கு விற்பனையான ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெய்(முதல் ரகம்) ரூ.180-க்கும், ரூ.180-க்கு விற்பனையான இரண்டாம் ரகம் ரூ.150-க்கும் விலை குறைந்துள்ளது.

இந்தியாவில் இருந்து அரபு நாடுகளுக்கு பாசுமதி அரிசி ஏற்றுமதி நிறுத்தப்பட்டுள்ளதால், உள்நாட்டில் அவற்றின் விலை அதிரடியாக குறைந்துள்ளது. கடந்த வாரம் ரூ.130-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ முதல் ரக பாசுமதி அரிசி ரூ.95-க்கும், ரூ.100-க்கு விற்பனை செய்யப்பட்ட 2-ம் ரகம் ரூ.80-க்கும், ரூ.80-க்கு விற்பனை செய்யப்பட்ட 3-ம் ரகம் ரூ.50-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

பூண்டு, மிளகாய் விலை ‘கிடுகிடு’

காலை மற்றும் இரவு இரு வேளைகளிலும் டிபன் சாப்பிடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அரிசிக்கு தேக்கம் ஏற்பட்டு வருகிறது. இதனால் அரிசி விலை 25 மூட்டைக்கு ரூ.100 முதல் ரூ.200 வரை குறைந்துள்ளது.விளைச்சல் குறைவால் பூண்டு, மிளகாய், கொத்தமல்லி ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. அதன்படி கடந்த வாரம் ரூ.130-க்கு விற்பனையான ஒரு கிலோ மலைப்பூண்டு ரூ.150-க்கும், ரூ.100-க்கு விற்பனையான நாட்டு பூண்டு ரூ.120-க்கும், ரூ.100-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ காய்ந்த மிளகாய் ரூ.130-க்கும், ரூ.90-க்கு விற்பனை செய்யப்பட்ட நீட்ட மிளகாய் ரூ.110-க்கும், ரூ.110-க்கு விற்பனை செய்யப்பட்ட கொத்தமல்லி ரூ.130-க் கும் விற்பனையாகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## பல்லாரி வெங்காயம் விலை உயருகிறது: வரத்து அதிகரிப்பால் தக்காளி விலை கடும் வீழ்ச்சி



சென்னை,

பல்லாரி வெங்காயம் விலை அதிகரித்திருப்பதாகவும், வரத்து அதிகரிப்பால் தக்காளி விலை கடும் வீழ்ச்சி அடைந்து, ஒரு கிலோ ரூ.6-க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

பல்லாரி வெங்காயம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த சில தினங்களாகவே காய்கறிகள் விலை குறைந்து காணப்படுகிறது. கடந்த மாதத்தில் விலை உயர்ந்து காணப்பட்ட பீன்ஸ், அவரைக்காய், கேரட், காலிபிளவர், முருங்கைக்காய் ஆகியவற்றின் விலை பெருமளவில் குறைந்துள்ளது. அதேபோல், ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த சாம்பார் வெங்காயம், தற்போது விலை சரிந்து ஒரு கிலோ ரூ.30 முதல் ரூ.35 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேசமயம், ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த பல்லாரி வெங்காயம் விலை திடீரென்று அதிகரிக்க தொடங்கியது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்டு வந்த தக்காளி, கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கடந்த மாதம் ரூ.20

முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அது மேலும் குறைந்து ஒரு கிலோ ரூ.6-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தக்காளி விலை வீழ்ச்சி

இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:- தக்காளி வரத்து அதிகரிப்பால் அதன் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் இருந்து நாளொன்றுக்கு 40 முதல் 50 லாரிகளில் வந்து கொண்டு இருந்த தக்காளி, தற்போது விளைச்சல் அதிகரிப்பால், வரத்து அதிகரித்து 60 முதல் 70 லாரிகளில் வந்து கொண்டு இருக்கிறது. மராட்டியம் மற்றும் ஆந்திராவில் இருந்து 2 வகையான பல்லாரி வெங்காயம் வருகிறது. இதில் தற்போது மராட்டியத்தில் இருந்து வரும் பல்லாரி வெங்காயம் வரத்து குறைவால் விலை அதிகரித்துள்ளது. ஆனால், ஆந்திரா பல்லாரி வெங்காயம் விலை அதிகரிக்கவில்லை. கோயம்பேடு மார்க்கெட்டுக்கு 60 லாரிகளில் வந்து கொண்டு இருந்த பல்லாரி வெங்காயம் விளைச்சல் குறைவால், 40 லாரிகளில் தான் வருகிறது. தொடர்ந்து மராட்டியம் பல்லாரி வெங்காயம் விலை அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. கடந்த வாரத்தில் ரூ.40-க்கு விற்பனை செய்யப்பட்ட மராட்டியம் பல்லாரி வெங்காயம், நேற்று கிலோவுக்கு ரூ.5 அதிகரித்து, ஒரு கிலோ ரூ.45-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

விலை நிலவரம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம்(ஒரு கிலோ) வருமாறு:- அவரைக்காய் - ரூ.15 முதல் ரூ.20 வரை, கத்தரிக்காய் - ரூ.8 முதல் ரூ.12 வரை, கோவைக்காய் - ரூ.15, கொத்தவரங்காய் - ரூ.15, காலிபிளவர் - ரூ.30, தக்காளி - ரூ.6 முதல் ரூ.10 வரை, மிளகாய் - ரூ.20, கேரட் - ரூ.30, பீன்ஸ் - ரூ.20 முதல் ரூ.25 வரை, உருளைக்கிழங்கு - ரூ.15, பல்லாரி

வெங்காயம் (மராட்டியம்) - ரூ.45, பல்லாரி வெங்காயம்(ஆந்திரா) - ரூ.30, சாம்பார் வெங்காயம் - ரூ.30 முதல் ரூ.35 வரை, முட்டைக்கோஸ் - ரூ.12, பீர்க்கங்காய் - ரூ.15, பீட்ரூட் - ரூ.20, சவ்சவ் - ரூ.25, சேனைக்கிழங்கு - ரூ.25, சேப்பக்கிழங்கு - ரூ.30, இஞ்சி (பழையது) - ரூ.90, இஞ்சி (புதியது) - ரூ.45, பாகற்காய் - ரூ.25 முதல் ரூ.30 வரை, முருங்கைக்காய் - ரூ.20 முதல் ரூ.30 வரை, வெண்டைக்காய் - ரூ.8 முதல் ரூ.15 வரை, புடலங்காய் - ரூ.15, சுரைக்காய் - ரூ.10, தேங்காய் - ரூ.18, வாழைக் காய்(காய் ஒன்று) - ரூ.5. இவ்வாறு அவர் கூறினார்.

## நீர்வள ஆதாரத்தை அதிகரிக்க கொசஸ்தலையாறு -ஆரணி ஆறுகளை இணைக்கலாம்; அண்ணா பல்கலைக்கழகம் ஆராய்ச்சி



சென்னை,

நீர் வளத்தை அதிகரிக்க சென்னை அருகே உள்ள கொசஸ்தலை ஆறு, ஆரணி ஆறு ஆகியவற்றை இணைப்பது குறித்து அண்ணாபல்கலைக்கழகம் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

அண்ணாபல்கலைக்கழகத்தில் மண்ணியல் துறை (ஜியாலஜி) உள்ளது. இந்த துறையில் பி.எஸ்சி. மண்ணியல் படித்த மாணவர்கள் எம்.எஸ்சி.மண்ணியல் சேருகிறார்கள். மேலும் ஏராளமான மாணவ-மாணவிகள் நீர்வளத்தை பெருக்கும் ஆராய்ச்சியில் உள்ளனர்.

இது குறித்து மண்ணியல் துறை தலைவர் பேராசிரியர் எல்.இளங்கோ கூறியதாவது:-

நிலத்தில் குட்டை அமைக்கவேண்டும்

முதல்-அமைச்சர் ஜெயலலிதா கொண்டுவந்த மழை நீர் சேகரிப்பு திட்டம் மகத்தானது. அண்ணாபல்கலைக்கழகத்தில் உருவாகும் கழிவு நீரை சுத்திகரித்து மீண்டும் அதை செடி, மரங்களுக்கு பாய்ச்சுகிறோம். அடுக்கு மாடி குடியிருப்பில் இந்த தண்ணீர் சுத்திகரிப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொருவரும் தனது நிலத்தில் அல்லது விவசாய நிலத்தில் ஒரு பகுதியை குட்டையாக அமைக்க வேண்டும். அப்படிச்செய்தால் அந்த குட்டையில் மழைநீர் தேங்கும். பூமியிலும் நீர்மட்டம் அதிகரிக்கும். அந்த இடத்தில் மட்டுமல்ல அந்த பகுதிக்கே நிலத்தடி நீர்மட்டம் உயரும். இப்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் குட்டை அமைத்தால் நல்லது.

பழவேற்காடு அருகே உதாரணமாக பழவேற்காடு அருகே ஆண்டார் மடம் உள்ளது. அந்த ஆண்டார் மடத்தில் உள்ள சுவாமி தயானந்த சரஸ்வதி வித்யாலயா பள்ளி அருகே குட்டை அமைக்கப்பட்டது. ஏற்கனவே அந்த இடத்தில் உள்ள தண்ணீர் உப்பு தண்ணீர் ஆகும். ஆனால் மழை நீர் குட்டை அமைத்தபின்னர் அந்த பகுதியில் தண்ணீர் நல்ல நீராக மாறி உள்ளது. இதேபோல பல விவசாயிகளிடம் குட்டை அமைக்கும்படி கூறினோம். ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் குட்டை அமைத்தால்

விவசாயம் செய்யும் நிலப்பரப்பு குறைந்துவிடும் என்கிறார்கள்.
ஆறுகளை இணைத்தல்

நீர் வளத்தை அதிகரிக்க கொசஸ்தலை ஆற்றையும், ஆரணி ஆற்றையும் இணைக்க மாணவர் ஒருவர் ஆராய்ச்சி செய்துள்ளார்.

அதாவது 6 கிலோ மீட்டர் தூரத்தில் இணைப்பு கால்வாய் வெட்டினால் போதும் இரு ஆறுகளையும் இணைத்துவிடலாம். அதனால் இரு ஆறுகளிலும் தண்ணீர் இருக்கும். ஏற்கனவே கொசஸ்தலை ஆற்றில் தடுப்பு அணைகள் கட்டப்பட்டுள்ளன. இதன் காரணமாக முன்பை விட நீர் ஆதாரம் அதிகரித்துள்ளது. இந்த ஆராய்ச்சி பற்றிய முழு விவரம் அரசுக்கு பின்னர் அனுப்பப்படும். இவ்வாறு பேராசிரியர் இளங்கோ தெரிவித்தார்.

## தோவாளை மார்க்கெட்டில் பிச்சி பூ விலை ரூ.275 உயர்வு ஒரு கிலோ ரூ.400–க்கு விற்பனை



தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ பிச்சி பூ விலை ரூ.275 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.400–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பூ மார்க்கெட்

நாகர்கோவில் அருகே தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் வியாபாரிகள் பூக்களை விற்பனை செய்வதற்காக கொண்டு வருகின்றனர்.

குமரி, நெல்லை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மோட்டார் சைக்கிள், மினிடெம்போ, பஸ் உள்ளிட்ட வாகனங்களில் கொண்டு வருகின்றனர். இங்கு பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்கப்படுகிறது.

பிச்சி பூ விலை உயர்வு

இந்த நிலையில் நேற்று பிச்சி பூவின் விலை உயர்ந்து காணப்பட்டது. நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.125–க்கு விற்பனை செய்யப்பட்ட பிச்சி பூ, நேற்று ரூ.275 உயர்ந்து ஒரு கிலோ ரூ.400–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பிச்சி பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறியதாவது:–

நாளை (இன்று) ஆடி மாத கடைசி வெள்ளிக்கிழமை. அதோடு ஆடி அமாவாசை என்பதால் பிச்சி பூவின் தேவை அதிகமாக இருந்தது. இதனால் வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர். இதனால் தான் பிச்சி பூவின் விலை உயர்ந்து காணப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

விலை விவரம்

மேலும் முல்லை ஒரு கிலோ ரூ.300–க்கும், கனகாம்பரம் ரூ.250–க்கும், மல்லிகை ரூ.250–க்கும், சம்பங்கி ரூ.200–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.150–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.150–க்கும், பட்டன்ரோஸ் ரூ.130–க்கும், சிவந்தி ரூ.120–க்கும், அரளி ரூ.120–க்கும், மருக்கொழுந்து ரூ.120–க்கும், கொழுந்து ரூ.100–க்கும், மஞ்சள் கேந்தி ரூ.60–க்கும், கேந்தி ரூ.60–க்கும், வாடாமல்லி ரூ.50–க்கும், கோழிப்பூ ரூ.50–க்கும், மாம்பழ கேந்தி ரூ.40–க்கும், துளசி ரூ.25–க்கும், பச்சை ரூ.5–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.300–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.20–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## நீலகிரி மாவட்டத்தில் வரையாடுகள் எண்ணிக்கை அதிகரிப்பு



மசினகுடி,

நீலகிரி மாவட்டத்தில் வரையாடுகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

<u>வரையாடுகள்</u>

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் வால்பாறை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் வரையாடுகள் காணப்படுகின்றன. இந்த வரையாடுகள் உயரமான மலைப்பகுதிகளில் மட்டும் வாழும். மேலும் செங்குத்தான பாறைகளில் வரையாடுகள் சகஜமாக ஏறும் வழக்கம் கொண்டவை. வரையாடுகளுக்கு நீலகிரி தார் என்ற பெயரும் உண்டு.

நீலகிரி மாவட்டத்தில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பல்வேறு இடங்களில் வரையாடுகள் காணப்பட்டன. நாளடைவில் வரையாடுகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்தது. அழிந்து வரும் வன விலங்குகள் பட்டியலில் உள்ள வரையாடுகளை பாதுகாக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது. இதைத் தொடர்ந்து வனத்துறையினர் வரையாடுகளை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

<u>முக்குருத்தி தேசிய பூங்கா</u>

இதன்படி நீலகிரி மாவட்டத்தில் முக்குருத்தி தேசிய பூங்கா உருவாக்கப்பட்டு வரையாடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 7 ஆயிரத்து 846 ஹெக்டேர் பரப்பளவில் காணப்படும் இந்த தேசிய பூங்காவில் தற்போது வரையாடுகள் உள்பட பல்வேறு வன விலங்குகள் காணப்படுகின்றன.

இந்த பகுதியில் கடந்த 2001–ம் ஆண்டு 40 முதல் 50 வரையாடுகள் மட்டுமே இருந்தன. தற்போது சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி 400–க்கும் மேற்பட்ட வரையாடுகள் காணப்படுகின்றன. நீலகிரி மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் தற்போது வரையாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மகிழ்ச்சி

இது குறித்து சமூக நல ஆர்வலர்கள் கூறியதாவது:–

தமிழகத்தின் விலங்காக நீலகிரி தார் என்றழைக்கப்படும் வரையாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. அழிந்து வரும் வன விலங்குகள் பட்டியலில் உள்ள வரையாடுகளை பாதுகாக்க தமிழக வனத்துறையினர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தனர். இதன் பலனாக தற்போது நீலகிரி மாவட்டத்தில் வரையாடுகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இது வனத்துறையினர், சமூக நல ஆர்வலர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## கலப்பட உரம் விற்றால் கடும் நடவடிக்கை வேளாண்மை அதிகாரி எச்சரிக்கை

தஞ்சை மாவட்டத்தில் கலப்பட உரம் விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மை அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அறிக்கை

தஞ்சை வேளாண்மை இணை இயக்குனர் ஞானஒளி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உற்பத்தியை இரட்டிப்பாக்கி விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்கும் உயரிய கொள்கையுடன் செயல்பட்டு வரும் தமிழக அரசு, விவசாயத்தை முதன்மை தொழிலாக கொண்ட இந்த மாவட்டத்தில் பயிரிடப்படும் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை உயர்த்த அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

மாவட்டத்தின் நெல் உற்பத்தி 10.67 லட்சம் மெட்ரிக் டன்னில் இருந்து 12 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும், உற்பத்தி திறனை எக்டேருக்கு 6,300 கிலோவிலிருந்து 7,300 கிலோவிற்கும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயறுவகை பயிர்களில் உற்பத்தி திறனை எக்டேருக்கு 760 கிலோவில் இருந்து 860 கிலோவிற்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பு

இந்த குறிக்கோளை அடைய உயர் உற்பத்திக்கு தேவையான விதைகள், உரம், நுண்ணூட்டங்கள், வேளாண்மை விற்பனை மையம், தொடக்க கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் மையங்களில் பருவம் தொடங்குவதற்கு முன்பாகவே இருப்பு வைக்கப்படும். களப்பணியாளர் மற்றும் துறையின் அனைத்து நிலை அலுவலரையும் விவசாயிகள் எளிதில் அணுகிடவும், துறை அலுவலர்கள் விவசாயிகளின் நண்பனாக செயல்படும் வகையிலும் வழிவகைகள் செய்யப்படும்.

அனைத்து பயிர்களின் உயர் விளைச்சல் தரும் ரகங்கள் உடனுக்குடன் தருவிக்கப்பட்டு பரவலாக்கப்படும். டெல்டா பகுதியில் மணிலா மற்றும் எள் சாகுபடிக்கு புத்துயிர் அளிக்கவும், வெளிச்சந்தையில் நல்ல கிராக்கியுள்ள ஆஷா மணிலா மற்றும் வெள்ளை எள் சாகுபடி பரப்பினை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நடவடிக்கை

தஞ்சை மாவட்டத்தில் கலப்பட உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பது

கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உரிமம் ரத்து செய்யப்படும். வேளாண்மை பொறியியல், தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகம் போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு திட்டங்கள் விரைவாக சிரமமின்றி உரிய காலத்தில் பயனாளிகளை சென்றடைய வழிவகை செய்யப்படும்.

மாவட்டத்திற்காக தனியாக திட்டங்கள் தேவையெனில் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு திட்டங்களை பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும். புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற காலங்களில் துறையின் செயல்பாடுகள் போர்க்கால அடிப்படையில் அமைய வழிவாகை செய்யப்படும்.இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

## தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் 10½ லட்சம் ஏக்கர் சம்பா, தாளடி சாகுபடி செய்ய இலக்கு

தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் 10½ லட்சம் ஏக்கர் சம்பா, தாளடி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்கான விதைநெல், உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

கல்லணை திறப்பு

காவிரி டெல்டா பகுதியான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடப்படுவதை பொறுத்து இதன் சாகுபடி பரப்பளவு அதிகரிக்கும். ஆனால் இந்த ஆண்டு போதிய தண்ணீர் இல்லாததால் வழக்கமாக திறக்கப்படும் ஜூன் 12-ந்தேதி மேட்டூர் அணை திறக்கப்படவில்லை.

இந்த நிலையில் சம்பா, தாளடி சாகுபடிக்காக மேட்டூர் அணை கடந்த 9-ந்தேதி திறக்கப்பட்டு தண்ணீர் கல்லணையை வந்தடைந்தது. இதையடுத்து கல்லணையில் இருந்து பாசனத்துக்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.

சம்பா, தாளடி சாகுபடி

காவிரி டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டதையொட்டி விவசாயிகள் தற்போது சம்பா, தாளடி சாகுபடி செய்வதற்கான ஆயத்தப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்போது நாற்றங்கால் தயாரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மொத்தம் 10 லட்சத்து 65 ஆயிரத்து 625 ஏக்கர் சம்பா, தாளடி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி இந்த ஆண்டு சம்பா பருவத்திற்கு சாவித்திரி, பி.பி.டி 5204, சுவர்ணாசப், ஆடுதுறை 38, ஆடுதுறை 39, ஆடுதுறை 46, கோ 50, ஜே.ஜி.எல் 1798 ஆகிய நெல் ரகங்கள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களிலும் விதைநெல் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நீண்டகால நெல் ரகங்களை இந்த மாத இறுதிக்குள் நாற்று விட வேண்டும். மத்திய கால நெல் ரகங்களை செப்டம்பர் மாத இறுதிக்குள் நாற்று விட வேண்டும். உற்பத்தி திறனை அதிகரிக்கும் இடுபொருட்களான நெல்நுண்ணூட்டம், மற்றும் திரவ உயிர் உரங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டம்

தஞ்சை மாவட்டத்தில் 3 லட்சத்து 43 ஆயிரத்து 125 ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதில் சம்பா சாகுபடி 2 லட்சத்து 66 ஆயிரத்து 875 ஏக்கரிலும், தாளடி 76 ஆயிரத்து 250 ஏக்கரிலும் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்கு தேவையான விதை நெல், உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு

வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களில் 1,350 டன் விதைகளும், உரங்களும் இருப்பு வைக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

திருவாரூர் மாவட்டம்

திருவாரூர் மாவட்டத்தில் 3 லட்சத்து 75 ஆயிரத்து 250 ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பா, தாளடி சாகுபடிக்கு தேவையான விதை நெல், உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டத்தில் தற்போது 1,721 டன் விதைகளும், உரமும் இருப்பு வைக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகின்றன. சம்பா சாகுபடிக்கு தேவையான 9 லட்சத்து 25 ஆயிரம் உயிர் உரப்பொட்டலங்கள், 15 ஆயிரத்து 400 லிட்டர் திரவ உயிர் உரங்கள் மற்றும் 112 டன் நுண்சத்து முதலிய இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது.

நாகை மாவட்டம்

நாகை மாவட்டத்தில் 3 லட்சத்து 47 ஆயிரத்து 250 ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சம்பா, தாளடி சாகுபடிக்கு தேவையான விதைநெல் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. நாகை மாவட்டத்தில் 1,944 டன் விதைகளும், உரங்களும் இருப்பு வைக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் உயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்து தேவையான அளவுஇருப்பு வைக்கப்பட்டு வினியோகிக்கப்படுகிறது.

## கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் விதையில்லா திராட்சை விளைச்சல் அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி



உத்தமபாளையம்

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் விதையில்லா திராட்சை விளைச்சல் அமோகமாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திராட்சை விவசாயம்

தேனிமாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை விவசாயத்திற்கு அடுத்தபடியாக கருப்பு பன்னீர் திராட்சை விவசாயம் நடைபெற்று வருகிறது. காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, அணைப்பட்டி, கூடலூர், அனுமந்தன்பட்டி, ராயப்பன்பட்டி, கோகிலாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் திராட்சை விவசாயம் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் திராட்சை பழம் கிடைக்கும் இடமாக கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விளங்குகிறது. இந்த பகுதியில் மழை மற்றும் பனிக்காலங்களாகிய அக்டோபர் முதல் பிப்ரவரி மாதம் வரை உள்ள காலங்களில் திராட்சை தோட்டங்களில் செவட்டை மற்றும் சாம்பல் நோய் தாக்கி திராட்சை பழம் விளைச்சல் மிகவும் குறைந்துவிடும்.

ஆராய்ச்சி மையம்

இதைத்தவிர பழங்கள் வெடிப்பு ஏற்பட்டு அழுகல் நோய் தாக்கி திராட்சை விவசாயத்திற்கு செலவு செய்த பணத்தை கூட எடுக்க முடியாமல் விவசாயிகள் அவதி அடைந்து வந்தனர்.

இதனையடுத்து இந்த பகுதியில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று திராட்சை ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டு திராட்சை விவசாயிகளை அழைத்து ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சைகளை எவ்வாறு பயிர் செய்வது என்பது குறித்து புதிய தொழில் நுட்பங்களை கற்றுத்தந்து புதிய ரக திராட்சைகளை பயிர் செய்தால் கூடுதல் லாபம் ஈட்டமுடியும் என்று அறிவுறுத்தினார்கள். இதில் முன்னோடி விவசாயிகளை மாராட்டிய மாநிலத்திற்கு அழைத்து சென்று அங்கு எவ்வாறு திராட்சை விவசாயம் செய்யப்படுகிறது. என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

<u>புதிய ரகங்கள்</u>

இதனை தொடர்ந்து ஆனைமலையன்பட்டியில் உள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சை உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு டாக்ரிட்ஜ் என்ற வேர்குச்சிகள் வழங்கப்பட்டு அதிகம் லாபம் தரக்கூடிய புதிய ரகங்களாகிய ரெட்குளோப், மெடிக்கா, சரத் விதையில்லா திராட்சை, கிருஷ்ணாசரத் மற்றும் நானாசாகிப் பர்ப்பிள் உள்ளிட்ட ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சைகளை விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு அதிக அளவில் விவசாயம் செய்து தற்போது திராட்சை பழங்களை அறுவடை செய்து வருகின்றனர்.

இதனால் திராட்சை பழங்களின் விளைச்சல் அமோகமாக நடைபெறுகிறது. ஏற்றுமதி தரம் வாய்ந்த இந்த கருப்பு விதையில்லா திராட்சை பழத்தை வியாபாரிகள் ஒரு கிலோ ரூ.80 முதல் 85 வரை கொள்முதல் செய்கின்றனர். இதன் மூலம் விவசாயிகள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

<u>விஞ்ஞானிகள்</u>

இதுகுறித்து திராட்சைஆராய்ச்சிநிலைய விஞ்ஞானிகள் பார்த்திபன், சுப்பையா ஆகியோர் கூறியதாவது:–

திராட்சைஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு தேவையான பல்வேறு வகையான ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சை ரகங்கள் பயிர் செய்ய வேர் செடிகள் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு வந்து வேர்செடிகளை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விவசாயிகளுக்கு காலநிலை குறித்து அறிய ஆராய்ச்சி நிலையத்தில் வானிலை மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் கால நிலைக்கு ஏற்றவாறு மருந்து தெளிக்கவும், என்ன மருந்து தெளிப்பது என்பது குறித்தும், விவசாயிகளின் செல்போன் எண்ணுக்கு தொடர்பு கொண்டு அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## இலவச கறவை மாடுகள் திட்டம் கூடுதலாக 1¼ லட்சம் லிட்டர் பால் உற்பத்தி நெல்லை கால்நடை மருத்துவ கல்லூரி விழாவில் அமைச்சர் சின்னையா தகவல்



நெல்லை

தமிழகத்தில் இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தால், கூடுதலாக 1¼ லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் சின்னையா கூறினார்.

<u>கல்லூரி ஆண்டு விழா</u>

நெல்லையை அடுத்த ராமையன்பட்டியில், நெல்லை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது. அந்த கல்லூரியின் ஆண்டு விழா, கல்லூரி வளாகத்தில் உள்ள நிர்வாகக் கூட அரங்கத்தில் நேற்று மாலையில் நடந்தது.

நெல்லை மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன் தலைமை தாங்கினார். நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

பேராசிரியர் ராம்பிரபு வரவேற்றுப் பேசினார். கல்லூரி முதல்வர் பிரதாபன் அறிக்கை வாசித்தார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் திலகர், பதிவாளர் அரிகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

<u>அமைச்சர் சின்னையா</u>

தமிழக கால்நடைத்துறை அமைச்சர் சின்னையா, விழா மலரை வெளியிட்டார். பின்னர் அவர் பேசியதாவது:–

இந்த நாள் மகிழ்ச்சியான நாள். கால்நடை பராமரிப்புத்துறைக்கு மிகவும் முக்கியமான நாள் ஆகும்.

2011–ம் ஆண்டுக்கு முன்பு வரை, கால்நடை துறை இந்த அளவுக்கு சிறப்பு பெறவில்லை. ஜெயலலிதா முதல்–அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு கால்நடைத்துறை தனித்துவம் பெற்றுள்ளது.

<u>ரூ.100 கோடி நிதி</u>

ஒரே ஆண்டில் நெல்லை, ஒரத்தநாடு ஆகிய 2 இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க முதல்–அமைச்சர் உத்தரவிட்டார். கல்லூரி தொடங்க ரூ.100 கோடி நிதியும் ஒதுக்கி தந்தார். 3 ஆண்டுகளில் மிகப்பிரமாண்டமான வசதியுடன் நெல்லை கால்நடை மருத்துவ கல்லூரி உருவாகி உள்ளது. இதற்கு காரணம் முதல்–அமைச்சர் ஜெயலலிதா எடுத்த நடவடிக்கைதான்.

தமிழ்நாட்டில் ஏழை, எளியோருக்கு இலவச ஆடு, மாடுகள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு உள்ளது. அந்த திட்டத்துக்கு என்றே கூடுதலாக கால்நடை டாக்டர்கள் தேவைப்படுகிறார்கள். அதன் அடிப்படையில் 2 கால்நடை மருத்துவ கல்லூரிகளை தொடங்க முதல்–அமைச்சர் உத்தரவிட்டார்.

இலவச கறவை மாடுகள் வழங்கப்படுவதால் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. அதாவது 1 லட்சத்து 35 ஆயிரம் லிட்டர் பால் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த 2012–ம் ஆண்டு 800 கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். 700 கால்நடை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர். தற்போது கூடுதலாக 300 கால்நடை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

<u>கூடுதலாக 20 இடங்கள்</u>

நெல்லை கால்நடை மருத்துவ கல்லூரியில் 40 மாணவர்கள் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. இந்த கல்வி ஆண்டு முதல் கூடுதலாக 20 இடங்கள் சேர்க்க அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்கான கவுன்சிலிங் முடிவடைந்துவிட்டது. இந்த கல்வி ஆண்டு முதல் 60 மாணவர்கள் சேர்ந்து படிப்பார்கள்.

முதல்–அமைச்சர் ஜெயலலிதா எடுத்த நடவடிக்கையால் கால்நடை துறை முன்னணி துறையாக திகழ்ந்து வருகிறது. அபரிமிதமான வளர்ச்சியை பெற்றுள்ளது. எனவே மாணவர்களான நீங்கள் அரசின் வசதிகளை பயன்படுத்திக் கொண்டு சிறந்த கால்நடை மருத்துவர்களாக வர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் சின்னையா பேசினார்.

தொடர்ந்து கல்லூரி ஆண்டு விழாவையொட்டி கல்லூரி மாணவ–மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அமைச்சர் சின்னையா பரிசு வழங்கினார்.

<u>வெளிநாட்டு மாணவர்கள்</u>

அமெரிக்க நாட்டில் உள்ள வெர்ஜினியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 8 மாணவர்கள், பயிற்சிக்காக நெல்லை கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு வந்துள்ளனர். இதில் 7 பேர் மாணவிகள். அவர்களும் கல்லூரி விழாவில் கலந்து கொண்டனர்.

இது பற்றி அந்த மாணவர்களிடம் கேட்ட போது, “இந்த கல்லூரி விழா எங்களுக்கு புதுமையான அனுபவமாக இருந்தது. 7 வார பயிற்சிக்காக நெல்லை வந்து இருக்கிறோம். இந்த கல்லூரியில் ஏராளமான

தகவல்களை பெற்று இருக்கிறோம். இந்த பயிற்சி எங்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்" என்றார்.

எம்.எல்.ஏ.க்கள்

விழாவில் எம்.எல்.ஏ.க்கள் முத்துச்செல்வி, நாராயணன், கோபால்சாமி, பயிற்சி கலெக்டர் கார்த்திகேயன், மானூர் யூனியன் தலைவர் கல்லூர் வேலாயுதம், நெல்லை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அவைத்தலைவர் பரணி சங்கரலிங்கம், ஜெயலலிதா பேரவை செயலாளர் சுதா பரமசிவம், ராமையன்பட்டி பஞ்சாயத்து தலைவி ராமலட்சுமி, சமத்துவ மக்கள் கட்சி பாளைங்கோட்டை தொகுதி செயலாளர் கணேசன் மற்றும் அரசு அதிகாரிகள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

## வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 76,432 கிலோ சூரியகாந்தி விதைகள் ரூ.26¾ லட்சத்திற்கு விற்பனை



வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை சூரியகாந்தி விதை டெண்டர் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. அதன்படி நேற்று நடந்த ஏலத்தையொட்டி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு 134 விவசாயிகள் 76 ஆயிரத்து 432 கிலோ சூரியகாந்தி விதையை விற்பனைக்கு கொண்டுவந்திருந்தனர். இதை 7 வியாபாரிகள் ரூ.26 லட்சத்து 75 ஆயிரத்து 732–க்கு ஏலம் எடுத்தனர். ஒரு கிலோ சராசரியாக 34 ரூபாய் 30 காசுக்கு விற்பனையானது. இந்த ஏலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

வாரந்தோறும் அதிக அளவில் சூரியகாந்தி விதைகள் விற்பனைக்கு வந்தும், விலை குறையாமல் விற்பனையாவதால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அனைத்து விவசாயிகளுக்கும் ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டது.

தினகரன்

**மழை குறைந்த பகுதி விவசாயிகளுக்கு ரூ.300 கோடி டீசல், விதை மானியம்**






புதுடெல்லி : போதிய மழையின்றி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு டீசல் மற்றும் விதை மானியமாக ரூ.300 கோடி வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் போதிய மழையில்லாததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு டீசல் மற்றும் விதை மானியமாக ரூ.300 கோடி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. காரிப் பருவ சாகுபடி மற்றும் தோட்ட பயிர்களை காக்க இந்த மானியம் செலவிடப்பட உள்ளது.

நீர்ப்பாசனத்துக்காக இந்த திட்டத்தில் ரூ.100 கோடி ஒதுக்கப்படுகிறது. இதன்படி, கடந்த ஜூலை 15ம் தேதி நிலவரப்படி, 50 சதவீதத்துக்கு மேல் பருவமழை பொய்த்து கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி விவசாயிகளுக்காக நீர்ப்பாசன வசதிக்காக 50 சதவீதம் டீசல் மானியமாக வழங்கப்பட உள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுபோல், விதைகளுக்கான மானியமும் வழங்கப்படும். இதன்மூலம் விவசாயிகள் பல்வேறு வகையான விதைகளை வாங்கி பயிர் செய்ய முடியும். விதைகள் வளர்ந்து பயன் தரக்கூடிய நிலை வரை தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து வருவதாக பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

**இயற்கை உரம் தயாரிப்பது எப்படி? வேளாண்துறை விளக்கம்**

கொள்ளிடம் : இயற்கை உரம் தயாரிப்பது குறித்து வேளாண்துறை பேராசிரியர் விளக்கம் அளித்துள்ளார். நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே நல்லூரில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்புல இறுதியாண்டு மாணவிகளின் குழு எண் 27ஐ சேர்ந்த மாணவிகளின் சார்பில் இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்த நடராஜன் தலைமை வகித்தார். இயற்கை விவசாயி கருமுத்து வரவேற்றார். வேளாண்துறை உதவி பேராசிரியர்கள் வெற்றிச்செல்வன், மணிமுத்துவிராழி, சிவக்குமார், மீனாம்பிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்துறை பேராசிரியர் பாலாஜிசங்கர் கலந்து கொண்டு பேசுகையில், சவுடு மண்ணுடன் மாட்டுகோமியத்தை கலந்து 10 நாட்கள் வைத்திருந்தால் அது யூரியா உரமாக மாறும். மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் கழிவுதான் பயிர்களுக்கு உணவாக பயன்படுகிறது. எனவே மண்ணை பாதுகாக்க வேண்டும். நெற்பயிரில் பூச்சியை கட்டுப்படுத்த ஆடுதொடா, வேம்பு, எருக்கு, ஊமத்தை, கொன்றை ஆகிய இலைகளை நறுக்கி மாட்டுகோமியத்துடன் கலந்து ஒருவாரம் முதல் 10 நாட்கள் வரை ஒரு பிளாஸ்டிக் வாளியில் மூடிவைத்து பின்னர் அதனை எடுத்து வடிக்கட்டி பயிருக்கு தெளிப்பதன் மூலம் பூச்சி தாக்குதலிலிருந்து முழுமையாக பாதுகாக்கலாம். இதற்கு பணம் செலவிடத் தேவையில்லை. வைக்கோலை சிறு துண்டுகளாக நறுக்கி குழிவெட்டி போட்டு அதன் மேல் சானத்தை தெளித்து சிலதினங்கள் கழித்து அதனை இயற்கை டி.ஒ.பி. அடி உரமாக பயன்படுத்தலாம் என்றார். முடிவில் மாணவி முத்தமிழ் நன்றி கூறினார்.

**திருவாரூர் மாவட்டத்தில் 3.75 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி இலக்கு**

**தேவையான அளவு உரம், விதை கையிருப்பு**

திருவாரூர் : திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு 3.75 லட்சம் ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேவையான உரம் மற்றும் விதைகள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்ட பாசனத்திற்காக கல்லணையிலிருந்து நேற்று நீர் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில் திருவாரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்தில் 3 லட்சத்து 75 ஆயிரத்து 250 ஏக்கரில் நெல் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நேரடி நெல் விதைப்பு முறையில் சாகுபடி மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுக்கு தேவையான 2ஆயிரத்து 476 மெ.டன் விதைகளில் தற்போது வேளாண் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள் மூலம் சான்று பெற்ற விதைகள் 818 மெ.டன் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் 1721 மெ.டன் விதைகள் கையிருப்பில் உள்ளது.

இந்த பருவத்திற்கு தேவைப்படும் 4லட்சத்து 12ஆயிரத்து 550 மெ.டன் யூரியா, 21ஆயிரத்து750 மெ.டன் டி.ஏ.பி. மற்றும் 13ஆயிரத்து750 மெ.டன் பொட்டாஷ் ஆகியவற்றில் தற்போது 4ஆயிரத்து926 மெ.டன் யூரியா, 2ஆயிரத்து610 மெ.டன் டி.ஏ.பி, 1605 மெ.டன் பொட்டாஷ் மற்றும் 373 மெ. டன் காம்ப்ளக்ஸ் ஆகியவை கையிருப்பில் உள்ளது. மீதமுள்ள தேவைக்கு, சம்பந்தப்பட்ட காலங்களில் தேவையை பொறுத்து 15 நாட்களுக்கு முன்கூட்டியே இருப்பு வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சம்பா சாகுபடிக்குத் தேவையான 9 லட்சத்து25ஆயிரம் உயிர் உரப் பொட்டலங்கள், 15ஆயிரத்து400 லிட்டர் திரவ உயிர் உரங்கள் மற்றும் 112 மெ.டன் நுண்சத்து முதலிய இடுபொருட்களும் இருப்பு வைக்கப்பட்டு வருகிறது.இவ்வாறு மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## பட்டாம்பூச்சிகள் அழிந்துபோக நீங்களும் காரணமாக இருக்காதீர்!



பெங்களூர், ஆக. 14-

பட்டாம்பூச்சிகளின் உடலில் இயற்கையாக அமைந்துள்ள நிறங்களைக் கண்டு எப்போதாவது சிலிர்த்துப் போனதுண்டா? சுமார் 15 கோடி ஆண்டுகளுக்கு முன்பே பரிணாம வளர்ச்சி அடைந்த இந்தப் பட்டாம்பூச்சிகள் கடந்த நூற்றாண்டில் மட்டும் அதன் நான்கு இனங்களை முற்றிலுமாகவே இழந்து விட்டன.

நம்மால் பேச முடியும், யோசிக்க முடியும் யோசித்தவற்றைச் செய்ய முடியும் என்கிற எண்ணத்தால் மனிதர்களாகிய நாம் பிற உயிரினங்களை துன்புறுத்துவதைப் பற்றியோ, அவற்றை அழிப்பதைப் பற்றியோ உணர்ந்துகொள்ளாமல், கடந்துபோய் விடுகிறோம்.

பட்டாம்பூச்சிகளைப் பாதுகாப்பதின் அத்தியாவசியத்தை உணர்த்தும் விதமாக கர்நாடகா மாநிலத்தின் துறைமுக நகரமான மங்களூரின் பேல்வாய் பகுதிக்கு அருகில், ‘சம்மில்லான் ஷெட்டி பட்டாம்பூச்சி பூங்கா’ இயற்கை ஆர்வலர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்காவில், புதிகாக சேர்க்கப்பட்ட பதினெட்டு புதிய பட்டாம்பூச்சி இனங்களுடன் மொத்தமாக நூற்றி முப்பத்தோரு வகை பட்டாம்பூச்சிகளுடன் இயற்கை ஆர்வலர்களின் மனதில் நீங்கா இடம்பெற்றுள்ளது. இந்தப் பூங்கா தொடங்கப்பட்டு இரண்டாண்டு நிறைவடைவதையொட்டி வரும் 15, 16-ம் தேதிகளில் பட்டாம்பூச்சிகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்படவுள்ளது.

அதில், பட்டாம்பூச்சிகளைப் பற்றிய வீடியோக்களும், அரிய உண்மைகளும் இயற்கை ஆர்வலர்களுக்காக காட்சிப்படுத்தப்பட உள்ளது. ஏற்கனவே, நிறைய பேர் தங்களது வீட்டுத் தோட்டங்களில் பட்டாம்பூச்சிகளை வளர்க்க இந்தப் பூங்காவினர் உற்சாகப்படுத்தியுள்ளனர். நம் நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டும் 339 பட்டாம்பூச்சி இனங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.